**இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை - 2023**

-----------------------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுக் கூற்று

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றின் பிரகாரம் அரசாங்க மானியங்கள் சபையின் பிரதான வருமான மூலமாக இருந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 5,470,285 அல்லது 07 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அதே போன்று மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த செலவினம் ரூபா 5,470,285 அல்லது 07 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. மீளாய்வாண்டிற்கான மொத்த செலவினத்தில் 68.5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 49,014,373 கூட்டுமொத்தமான பதவியணியினர் கிரயம் மற்றும் கட்டிட வாடகை முன்னைய ஆண்டின் மொத்த செலவினத்தின் 69 சதவீதத்துடன் ஒப்பிடும் போது சற்று குறைவடைந்திருந்தது. விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| விடயம் | ஆண்டிற்கானது 2023 ரூபா | 2022 ரூபா | அதிகரிப்பு/ (குறைவு) ரூபா | % |
|---|---|---|---|---|
| மொத்த செலவினம் | 71,544,975 | 77,015,260 | 5,470,285 | 07 |
| - பதவியணியினர் கிரயம்<br>- கட்டிட வாடகை | 49,014,373 | 52,907,286 | | |
| மொத்த செலவினம் (%) | 68.5 | 69 | | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதன் செயலாற்றல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டில் 261 (SBEs) தொடர்பான 252 நிதிக்கூற்றுத் தொகுதிகளை மீளாய்வு செய்வதற்கு சபை திட்டமிட்டிருந்தது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களின் மீளாய்வுத் திட்டம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 51 சதவீதம் குறைவடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | திட்டமிடும் நேரத்தில் மீளாய்வுகளில் நேரடியாக ஈடுபடுத்துவதற்கு காணப்படும் குறைந்த எண்ணிக்கையிலான பணியாளர்களைக் கருத்தில் கொண்டு, பணித் திட்டம் திருத்தப்பட்டது. | நிதிக்கூற்றுக்களின் மதிப்பாய்வுகளின் எண்ணிக்கையை மேம்படுத்துதல் வேண்டும். |

### 3.2 செயற்திட்டங்களில் தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அலுவலக வளாகத்தின் உட்புற வேலைகளை வடிவமைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகியவற்றிற்கான ஆலோசனை சேவைகளுக்காக மொத்த நிர்மாணக் கிரயத்தில் 7 சதவீத கிரயத்தில் 2019 சனவரி 30 இல் இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் சபை உடன்படிக்கையொன்றை செய்திருந்தது. 2021 ஒக்தோபர் 27 இல் நிர்மாண அபிவிருத்திக் கட்டம் பூர்த்தி செய்யப்பட்டு, ஆலோசனை விலைப்பட்டியலில் இருந்து 65 சதவீதம் அறவிடப்பட்டது. எனினும், கணக்காய்வு திகதியான 2024 மே 31 வரையிலும் ஆலோசனையின் மிகுதி வேலை கட்டம் அல்லது வளாகத்தின் முன்மொழியப்பட்ட மேம்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | அந்த நேரத்தில் நடைமுறையில் இருந்த அரசாங்க கட்டுப்பாடுகள் காரணமாக அலுவலக வளாகத்தின் வடிவமைப்பு மற்றும் உட்புற பணிகள் 2019 இல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. மேலும், 2021 இல் கூறப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக, இந்த செயற்திட்டத்தை மீண்டும் தொடங்க முடியவில்லை. 2024 ஆம் ஆண்டில், கடுமையான பாதீட்டு ஒதுக்கீட்டைக் கருத்தில் கொண்டு, SLAASMB பணியை மீண்டும் தொடங்க முடியவில்லை. | பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குள் பணிகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் 23 வெற்றிடங்கள் இருந்தன. அதில் 20 வெற்றிடங்கள் நிறைவேற்று மட்டத்தில் இருந்தன, அவை சபையின் முக்கிய செயல்பாடுகளைப் பாதிக்கின்றன. மேலும், வெற்றிடமாக உள்ள 20 பதவிநிலைகளில், பிரதி/உதவி பணிப்பாளர் (சட்டம்) பதவிநிலை சபை தொடங்கப்பட்டதிலிருந்தே வெற்றிடமாக இருந்தன, மேலும் பிரதி பணிப்பாளர் மேற்பார்வை மற்றும் உதவி பணிப்பாளர் மேற்பார்வை ஆகிய 6 பதவிநிலைகளிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி, நிர்வாகம் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவுகளின் தலைவர் பதவிகளும் வெற்றிடமாக இருந்தன. | 2023 இல் 2021 இன் திருத்தப்பட்ட சம்பளக் கட்டமைப்பை ஏற்றுக்கொண்ட போதிலும், 2023 இல் பல சந்தர்ப்பங்களில் வெற்றிடத்தை விளம்பரப்படுத்திய பின்னரும், தொடர்ந்தும் SLAASMB ஆல் தகுந்த விண்ணப்பதாரர்களை நியமிக்க முடியவில்லை. எனவே, தேவைக்கேற்ப மீளாய்வு உள்ளடக்கத்தை அதிகரிப்பதற்கு புதிய பதவியணியினரை நியமிக்க வேண்டியதன் காரணமாக, பணிப்பாளர் மேற்பார்வை மற்றும் உதவி பணிப்பாளர் மேற்பார்வை ஆகிய இரண்டிற்கும் தேவையான வருட அனுபவத்தைக் குறைப்பதற்கு சபை முடிவு செய்துள்ளது.<br><br>அந்தத் திருத்தத்திற்குப் பின்னர் SLAASMB 2024 மார்ச் மாதத்தில் ஒரு பணிப்பாளர் மேற்பார்வையையும், 2024 ஏப்ரல் மாதத்தில் மூன்று உதவி பணிப்பாளர் மேற்பார்வை - தரம் 2-ஐயும் ஆட்சேர்ப்பு செய்தது.<br><br>MIS இறுதி செய்யப்படுவதால், சேவைகளின் அவசரத்தின் அடிப்படையில் 2023 நவம்பர் முதல் IT செயற்பாடுகளை வெளிப்புற ஆலோசனை நிறுவனத்திற்கு SLAASMB தற்காலிகமாக வழங்கியிருந்தது. பதவியை நிரப்புவதில் உள்ள சிரமங்கள் மற்றும் IT வழிகாட்டல் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், அதிக சம்பளத்தில் ஒப்பந்த அடிப்படையில் ஒரு IT நிர்வாகியை (ICT உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டார்) ஆட்சேர்ப்பு செய்வதற்கு சபை அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. கவர்ச்சிகரமான சம்பளத்தின் விளைவாக SLAASMB ஆல் 2024 ஏப்ரல் முதல் தகுதியான ICT உத்தியோகத்தரை ஆட்சேர்ப்பு செய்ய முடிந்தது. | அணுகுமுறைகளுடன் தகுந்த பதவியணியினரை உடனடியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |